ORIGINAL ARTICLE

# குழந்தை தத்தெடுப்புத் தொடர்பான சட்ட நியாயவியல் ஒரு வரலாற்றுப் பகுப்பாய்வு

**[KUḺANTAI TATTEṬUPPUT TOṬARPĀṈA CAṬṬA NIYĀYAVIYAL ORU VARALĀṞṞUP PAKUPPĀYVU]**

# THE JURISPRUDENCE OF CHILD ADOPTATION: A HISTORICAL REVIEW

**A.L. பாத்திமா ஷமீதா / A.L. Fathima Zameetha** *1
**M.I.M. ஜெஸீல் / M.I.M. Jazeel** 2

1 Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka, Sri Lanka.
Email: fathimazameetha@seu.ac.lk
2 Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka, Sri Lanka.
Email: jazeelmi@seu.ac.lk

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/280

**Abstract**

Child adoption has been a longstanding practice in several legal traditions throughout human history. The national progression of child adoption has influenced the corresponding legislative modifications. Examining the Legal Framework of Child Adoption within the Context of Jurisprudence This article provides a historical analysis of the progression toward different legal frameworks. The qualitative examination of pertinent literature is predicated on investigating its content. Both individual countries and international organizations are actively engaged in developing legal frameworks that infringe upon children's rights and compromise their best interests. The adoption laws rooted in the penal code within the common law system have limited efficacy in mitigating instances of child abuse. In addition, international declarations, treaties, legal actions, and established norms protect the rights and interests of adopted children. Utilizing these tools is particularly noteworthy within the context of the intercountry adoption procedure. The legal laws pertaining to adoption have undergone significant development in various aspects, including the criteria for adopter eligibility, the requirement of adopter permission, the determination of adoptive family rights, and the establishment of support obligations.

**Keywords**: Child adoption, Rights of Adopted Children, Jurisprudence, International Declarations

**ஆய்வுச் சாரம்**

மானிடசமூகத்தில் தொன்றுதொட்டு வழக்கிலுள்ள குழந்தை தத்தெடுத்தல் தொடர்பான சில சட்ட மரபுகள் அக்கால முதல் நடைமுறையில் இருந்துள்ளது. குழந்தை தத்தெடுப்பில் ஏற்பட்ட கால தேச பரிணாம வளர்ச்சி அது தொடர்பான சட்ட பரினாமங்களில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. குழந்தை தத்தெடுத்தலை சட்ட நியாயவியல் வாதங்களுக்கு உட்படுத்தி பல்வேறுபட்ட சட்ட ஏற்பாடுகளாக பரிணமிக்க மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகளை வரலாற்று ரீதியாக இவ்வாய்வு பரிசீலிக்குட்படுத்துகின்றது. பண்பு ரீதியான இவ்வாய்வு சம்மந்தப்பட்ட இலக்கியங்கள் மீதான மீளாய்வு அவற்றின் உள்ளடக்க பகுப்பாய்வு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டது. குழந்தை மற்றும் சிறுவர் உரிமைகளை மீறி, அவர்களின் நலன்களை பாழ்படுத்தும் சூழல்கள், நிலைமைகள் கருத்தில்கொண்டதான சட்ட ஏற்பாடுகளை தோற்றுவிக்கும் முனைவில் தனிப்பட்ட நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் கரிசனைகொண்டு ஈடுபட்டுள்ளன. தத்டுெத்தல் தொடர்பான சட்டவிதிகள் பொதுச்சட்ட முறைமை, தண்டனைச் சட்டக்கோவையில் உள்ளீர்க்கபட்டமை சிறுவர் துஷ்பிரயோகங்களை வெகுவாக குறைத்துவிடவல்லது. இதுதவிர, சர்வதேச பிரகடனங்கள், ஒப்பந்தங்கள் விதிக்கும் சட்டப்பெறுமானங்கள், நடைமுறைகள் தத்துக் குழந்தைகளின் உரிமைகளை, நலன்களை உறுதிசெய்வதை உத்தரவாதப்படுத்தவல்லன. குறிப்பாக நாடுகளுக்கிடையிலான தத்தெடுத்தல் செயல்பாட்டில் அவற்றின் பயன்பாடு குறிப்பிடத்தக்கது. இந்த சட்ட ஏற்பாடுகள் தத்தெடுப்பவரின் தகுதிவிதிகள், தத்துகொடுப்போரின் சம்மதம், தத்துக் குழச்தைக்கான சொத்துரிமை, பாராமரிப்பு போன்ற தளங்களில் பரிணமித்துள்ளது.

**கருச்சொற்கள்**: குழந்தை தத்தெடுத்தல், தத்துக் குழந்தைகளின் உரிமைகள், சட்ட நியாயவியல், சர்வதேச பிரகடனம்

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 14th December 2023, revised 20th January 2024, accepted 16th February 2024

## முன்னுரை

புராதன காலம் தொட்டே வழக்கிலுள்ள (United Nation, 2009)[1] குழந்தைகளை தத்தெடுத்து வளர்த்தல் எனும் செயற்பாட்டில் தத்தெடுத்தல் என்பது பலவாறு பொருள் கொள்ளப்படுகின்றது. ஒருவரின் குழந்தையை சட்டபூர்வமாக எடுத்து, அதனை தனது குழந்தை போல வளர்த்தல் என பொதுவாகக் கொள்ளப்படுகிறது (Rosenthal, 1993)[2]. தத்தெடுத்தல் என்பது தத்தெடுக்கும் தம்பதியினர் அல்லது ஒரு நபருக்கும் குழந்தைக்கும் இடையில் பெற்றோர் – குழந்தை உறவை உருவாக்கும் சட்ட ஏற்பாடு ஆகும். அதனால் தத்தெடுத்த பெற்றோர்களின் குடும்பப் பெயர் மற்றும் சொத்துக்களை அவர்களின் அதிகாரத்துக்கு உட்பட்ட வகையில் அக்குழந்தை பெறுகின்றது. குழந்தையின் உயிரியல் பெற்றோரிடமிருந்து அவர்களின் உரிமைகளை சட்ட முறைகளின் ஊடாக நிரந்தரமாக மாற்றும் நடைமுறை எனவும் அதனைக் குறிப்பிட்டுக்காட்டலாம் (Muslim Women’s Shura Council, 2011)[3].

வெளிநாடுகளில் இருந்து குழந்தைகள் தத்தெடுத்தல் உள்ளிட்டு கடந்த சில தசாப்தங்களாக குழந்தை தத்தெடுப்பு நடைமுறை உலகம் முழுக்க பெருமளவு அதிகரித்து வந்துள்ளதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன (Walker, 2008)[4]. குழந்தைகள் இல்லாமை,

குழந்தைகள் இருந்தும் சில ஜோதிட காரணங்கள், சொத்துக்களை நிர்வகித்தல், ஈமச்சடங்கு செய்ய ஆண் வாரிசுகள் இல்லாமை, வீடு மங்களகரமாக இருக்க பெண் குழந்தைகள் வேண்டுவது போன்றன குழந்தைகளை தத்தெடுக்கும் நடைமுறைக்கான காரணங்கள் எனலாம் (Olanike, 2015)[5]. இவற்றுள் குழந்தை பேறு இன்மை பெறுகின்றது (Zameetha & Jazeel, 2023)[6]. ஒரு புறம் ஆணுறை பயன்பாடு, கருக்கலைப்பு, திருமணமற்ற வாழ்வுக்கான அங்கீகாரம் மற்றும் பொருளாதார தன்னிறைவு போன்ற நவீன வாழ்வின் சுதந்திரங்களும், இன்னொரு புறம் பொருளாதார நெருக்கடிகளும், உடல் மன அழுத்தங்களும் மக்களிடையே குழந்தைப்பேறை குறைத்து மலட்டுத்தன்மையை அதிகரித்துள்ள (Jeanne, 2004)[7] இன்றைய சூழலில் குழந்தைத் தத்தெடுப்பு பகரமாகிறது. வளர்ந்த நாடுகளில் உள்ளூரில் தத்தெடுப்பதற்கான குழந்தைகளின் எண்ணிக்கை குறைந்து, மூன்றாம் உலக நாடுகள் குழந்தைச் சந்தையாக்கப்பட்டுள்ளமையும் நோக்கத்தக்கது. மேலும் மக்களுக்கு தமது சொந்தத்துக்குள் தத்தெடுப்பது விருப்பமற்றதாக மாறிவிட்டுள்ளது. ஆகவே தனிமனிதவாதமும், சொந்தத்தில் தத்தெடுத்தால் குழந்தை மீது முழு உரிமை இருக்காது என்ற நியாயமான அச்சத்தினாலும் தத்தெடுப்பு நிறுவனமயமாக்கப்பட்டதாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது (Efrat, et al, 2015[8]., Bethmann,et al[9], 2012., Jeanne, 2004[7]., Walker, 2008[4]).

குழந்தை தத்தெடுப்பு என்பது உயிருள்ள குழந்தை மீதான உரிமை மாற்றம் தொடர்பானது. எனவே அது சமூக மற்றும் குடும்ப ரீதியான பிரச்சினைகளை தோற்றுவிக்கவல்லது. மேலும் அது ஏற்படுத்தும் உளவியல் சார்ந்த எதிர்விளைவுகளும் வலுவானது. ஆகவே தத்தெடுத்தலை சில மதங்கள் ஏற்றுக்கொண்டுள்ள போதிலும் வேறு சில மதங்கள் தடை செய்துள்ளது. இஸ்லாம் குழந்தை தத்தெடுப்பை முற்றாக மறுதலித்து மாற்றீடுகளை விதந்துரைக்கிறது (Zameetha & Jazeel, 2022)[10] என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் குழந்தை தத்தெடுப்பு ஒரு நீண்ட கால சமூக மரபாக இருந்துவருவது சட்ட அங்கீகாரத்தை பெறுவதற்கு துணைசெய்துள்ளது. மட்டமல்லாது குழந்தை தத்தெடுப்பு செயற்பாட்டில் எழும் பிரச்சினைகளை தவிர்க்கவும் அவற்றை தீர்க்கவும் சட்ட ஏற்பாடுகளை உருவாக்கி கொள்வதற்கான சட்டவாக்க முனைவுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சட்ட நியாயவியல் (Jurisprudence) பாற்பட்ட குழந்தை தத்தெடுத்தல் செயற்பாடு படிமுறைகளான சட்ட அங்கீகாரத்தை பெறவும் பல்வேறுபட்ட சட்ட ஏற்பாடுகளாக பரிணமிக்கவும் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகளை வரலாற்று ரீதியாக இவ்வாய்வு பரிசீலிக்க விழைகிறது. பண்பு ரீதியான இவவாய்வு சம்மந்தப்பட்ட இலக்கியங்கள் மீதான மீளாய்வு அவற்றின் உள்ளடக்க பகுப்பாய்வு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டது.

## பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

### குழந்தை தத்தெடுத்தல் சட்டவாக்க வரலாற்றுப் பின்புலம்

பண்டைய கால மக்கள் தத்தெடுப்பினை மரபாகக் கொண்டிருந்தது போல் அது தொடர்பான சட்டவிதிகளையும் கொண்டிருந்தனர் எனலாம். பாபிலோனியாவில் காணப்பட்ட ஹம்முராபியின் சட்டக் கோவையானது (Code of Hammurabi) தத்தெடுப்பு பற்றி முன்னேற்றகரமான விதிகளை உள்ளக்கிய ஆரம்பகால சட்ட இலக்கியமாக காணப்படுகின்றது. அக்காலத்தில் தத்தெடுக்கப்பட்ட குழந்தை ஒன்று தனது உயிரியல் பெற்றோரிடம் திரும்பிச் செல்ல முயற்சித்தால் மிகக் கடுமையான தண்டனை வழங்கப்பட்டதுடன் அக்குழந்தை தனது வளர்ப்புப் பெற்றோருக்குரிய கடமைகளை முறையாக நிறைவேற்றவில்லை என்று கருதி தத்தெடுப்பு ஒப்பந்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. மேலும் தத்தெடுக்கப்பட்ட குழந்தைகள் தாம் உண்மைக் குழந்தைகள் அல்ல என்ற உண்மையை வெளியே சொல்ல தடை விதிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு சொன்னால்

நாவுகள் வெட்டப்பட்டதாகவும் உயிரியல் பெற்றோர்களை தேடிச் சென்ற குழந்தைகள் குருடாக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இச்சட்டக் கோவையில் காணப்பட்ட பின்வரும் சில விதிமுறைகள் நோக்கத்தக்கது. 185வது விதி ''குழந்தை ஒன்றினை தத்தெடுத்து வளர்த்த பிறகு அக்குழந்தை தனது உயிரியல் பெற்றோரிடம் திரும்பிச் செல்ல முடியாது''. 186வது விதி ''ஆண் குழந்தையினை தத்தெடுத்து வளர்த்த பிறகு அக்குழந்தை தனது வளர்ப்புப் பெற்றோருக்கு ஏதேனும் ஊறு விளைவித்தால் அக்குழந்தையினை அதனது தகப்பன் வீட்டுக்கு திருப்பி அனுப்பப்படும்'' என விதிக்கிறது (Ben-Nun, 2016)[11].

ஆரம்ப கால கிரேக்கச் சட்டமும் தத்தெடுத்தல் தொடர்பான விதிமுறைகளை உள்ளடக்கியிருந்தது. புராதன ரோம காலத்தின் தத்தெடுப்பு நடைமுறை பற்றி *''கோடக்ஸ் ஜஸ்டினியானுஸ்'' (Codex Justinianus)* இல் முறையாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளதாக வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

கி.பி 18ம் நூற்றாண்டு காலப்பகுதியில் தத்தெடுப்பு தொடர்பான சட்டப் பெறுமானங்களும் நவீன கால தத்தெடுப்பு சட்டத்திற்கு பொருத்தமான பல்வேறு அம்சங்களை கொணடிருந்தமை குறிப்பிடத்தக்கது. உதாரணமாக, உயிரியல் பெற்றோரின் சம்மதத்துடன் மேற்கொள்ளபபடும் சட்ட ஒப்பந்தமே தத்தெடுப்பு என வரையறுக்கின்றது. இங்கு பிறக்கும் குழந்தைக்கு வழங்கப்படும் அதே உரிமைகளை தத்தெடுக்கும் குழந்தைக்கும் வழங்க வேண்டும் எனவும் குறித்துக் காட்டப்படுகின்றது. இருந்த போதிலும் இச்சட்டக் கோவையில் தற்கால நடைமுறைக்கு முற்றிலும் மாற்றமான பல சட்ட ஏற்பாடுகள் (Provisions) காணப்பட்டதாக ஆய்வுகள் காண்பிக்கின்றன (United Nation, 2009)[1].

20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இடம்பெற்ற போர்கள், அவை ஏற்படுத்திய நெருக்கடிகள் குழந்தை தத்தெடுத்தலுக்கான சூழலை விரிவுபடுத்தியிருந்தது. முதலாம் உலகப் போரும் அதைத் தொடர்ந்து வந்த பரவலான இன்பிளுவன்சா சளிக்காய்ச்சலும் லட்சக்கணக்கான உயிர்களை பலி வாங்கியதுடன், குழந்தைப்பிறப்பு சதவீதம் குறைந்தது. அதன் விளைவாக முதன் முறையாக தரகர்கள் மூலம் குழந்தைகளை 'தத்தெடுக்க' மக்கள் முயன்றதாக வரலாற்று மூலங்களில் காணக் கூடியதாகவுள்ளது. பிற்காலத்தில் இது ஒரு கள்ளச் சந்தையாக உருவெடுத்ததன் காரணமாக அரசாங்கம் தலையிட்டு தத்தெடுப்பை சட்டரீதியாக ஒழுங்குப்படுத்தியதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது (Horwitz, et al, 2013)[12]. இரண்டாம் உலகப் போரின் போது உயிரிழப்பையும் மற்றும் பொருளாதார சரிவையும் சந்தித்த ஐரோப்பிய நாடுகள் அங்குள்ள அனாதைக் குழந்தைகளை ஜப்பான் மற்றும் சீனா போன்ற வெளிநாடுகளுக்கு, குழந்தையற்ற குடும்பங்களை நோக்கி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது (Zhang, 2006)[13] இதனை நன்கு புலப்படுத்துகின்றது . மேலும் வியட்நாம் மற்றும் கொரிய போர்களின் விளைவினால் பல நாடுகள் தத்துச் சந்தைகளாக மாறியதாக எடுத்துக்காட்டுகின்றன. வறிய நாடுகளில் இருந்து குழந்தைகளை தத்தெடுத்து வளர்ப்பது, வளர்ந்த நாடுகளிலுள்ள பிரஜைகளுக்கு ஒரு புண்ணிய செயலாகவும் கருதப்பட்டது. உதாரணமாக 1991 இல் ரொமானியாவில் இருந்து 5000 குழந்தைகள் வெளிநாடுகளில் தத்தெடுக்கப்பட்டதாகவும் இவர்களில் அநேகமான குழந்தைகள் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது (United Nation, 2009)[1]

இந்தியா குழந்தை தத்தெடுப்புக்கான பிரத்தியோகச் சூழலைக் கொண்டது எனலாம். இங்கு தத்துக்குழந்தைகளை பிறப்பில் அனாதையானவர்கள் மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகள் என வகைப்படுத்தலாம். பிறப்பில் பெற்றோரை இழந்த குழந்தைகள் ஒரு சிறு தொகையினர் மட்டுமே என்ற நிலையில் அநேகமாக கைவிடப்பட்டவர்களே அதிகம்

(Mignot,2019)[14]. தாய்மார்கள் ஏழ்மை மற்றும் சமூக அவமானம் காரணமாக குழந்தைகளை அநாதை இல்லங்கள் உள்ளிட்ட தத்தெடுப்பு முகவர்கள் நடத்தும் நிறுவனங்களில் விட்டுச் சென்றனர். பிறந்த இளம் மழலைகள் மட்டுமல்ல ஒரு வயது கடந்த குழந்தைகளை கூட வறிய குடும்பச் சூழல் காரணமாய் கொடுத்து விடுவதாகவும் ஆய்வுகள் எடுத்தியம்புகின்றன (Wang, et al, 2018)[15]. தத்துக்குழந்தைகளில் நான்கில் ஒரு தொகையினரே உள்நாட்டில் தத்து அளிக்கப்பட்டனர் ஆயினும் பின்னர் வெளிநாடுகளில் தத்து அளிக்கப்படுவதை விட இரட்டிப்பாக குழந்தைகள் உள்நாட்டு பெற்றோர்களை சென்றடைகின்றனர். இந்த எண்ணிக்கையை மேலும் அதிகம் என ஆய்வாளர்கள் நம்புகிறார்கள். இருந்தபோதிலும் வெளிநாட்டு தத்தெடுப்பினை ஆதராமாகக் கொண்டுள்ளள தனியார் முகவர் நிறுவனங்களில் கையில் தான் இந்தியாவில் கைவிடப்பட்ட குழந்தைகளின் பராமரிப்பானது பெருமளவு இருந்துள்ளது (Wang, et al, 2018)[15] இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் சட்ட விரோதமான முறைகளில் "குழந்தைகள் பண்ணை" 1980ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் செயற்பட்டு வந்துள்ளமைக்கு சான்றுகள் உள்ளன. 1987 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் புதிதாகப் பிறந்த 20 குழந்தைகள் விற்பனை செய்யப்பட்டமை தொடர்பில் 22 பெண்கள் கைது செய்யப்பட்டதாக அறியமுடிகின்றது. இதன் விளைவாகவே இலங்கையில் நாடுகளுக்கிடையிலான தத்தெடுப்பிற்கு தடை விதிக்கப்பட்டதாக அமைச்சு குறிப்புக்கள் காண்பிக்கின்றன. பணத்திற்காக குழந்தைகளை விற்பனை செய்த குற்றச்சாட்டில் சி.எஸ்.சி நேஷன் லங்கா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியும் பணிப்பாளருமான மஞ்சுள லசந்த உக்வத்த கைது செய்யப்பட்டதுடன் மொறட்டுவ, ஹல்தமுல்ல, சி.பி.டி சில்வா மாவத்தை மற்றும் தஹம் மாவத்தை ஆகிய பிரதேசங்களில் இயங்கிய வந்த குழந்தை பண்ணைகளும் சுற்றி வளைக்கப்பட்டது. இதில் கருக்கலைப்பினை எதிர்கொள்ளும் பெண்களைப் பாதுகாத்து, பிள்ளைகள் பிறந்த பின்னர் தத்தெடுப்பவர்களுக்கு வழங்கப்படுவதாகவும் குறித்துக் காட்டப்படுகின்றது. அது போன்று அங்கு மூன்று குழந்தைகளுடன் தாய்மார்களும், 12 கர்ப்பிணித் தாய்மார்களும் காணப்பட்டதாகவும் 45 குழந்தைகள் ஏற்கனவே விற்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது (Paththirana, 2021)[16]. மேலும் இலங்கையில் 1980-1990களுக்கு இடைப்பட்ட காலத்தில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் தத்துக் கொடுப்பதற்காக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதில் சில, "குழந்தை சந்தைகள்" மூலம் ஐரோப்பாவிற்கு அனுப்பப்பட்டதாக குற்றசாட்டுகளும் உள்ளன. இதில் பல குழந்தைகளை நெதர்லாந்தில் தத்துக் கொடுக்கப்பட்டதாகவும் குறித்துக்காட்டப்படுகின்றது (United Nation, 2009)[1].

உலக நாடுகள் யாவற்றிலும் குழந்தைகள் தத்தெடுப்பானது அதிகரித்த வண்ணமுள்ளது என்பதனை அவதானிக்க முடிகின்றது. சிறுவர்கள் தொடர்பாக பல்வேறு சட்டங்கள் உருவாக்கப்பட்ட போதிலும் சட்டரீதியான முறையிலோ அல்லது சட்டரீதியற்ற முறையிலோ தத்தெடுப்பு இடம்பெற்று வருகிறது எவரும் மறுக்க முடியாத உண்மையாகும். ஆபிரிக்காவிலுள்ள சில நாடுகளான நைஜீரியா, கொங்கோ, தென்னாப்பிரிக்கா, மாலி, கானா, ஐவரி கோஸ்ட், மொரோக்கோ மற்றும் உகாண்டா போன்றன சர்வதேச தத்தெடுப்புக்காக பரிந்துரைக்கப்பட்ட நாடுகளாக அடையாளப்படுத்தப்பள்ளமையும் நோக்கத்தக்கது (Skidmore, et al, 2014)[17].

குழந்தை தத்தெடுப்புக்கள் எனும் போர்வையில் பல நாடுகளில் துஷ்பிரயோகம், கடத்தல் மற்றும் விற்பனை இடம்பெறுவது கவனத்தை ஈர்த்துள்ளது. நைஜீரியாவிலுள்ள குழந்தைகள் வெளிநாட்டினரால் தத்தெடுக்கப்பட்டு, அக்குழந்தைகள் வீட்டு வேலைக்காகவும், பாதையோரங்களில் பொருட்களை விற்பனை செய்வதற்காகவும், பிச்சைக்காரர்களாகவும் பயன்படுத்தப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதுபோன்று இலங்கையிலும் இடம்பெற்றுள்ளதாகவும் இவ்வாறான துஷ்பிரயோகங்கள் சட்ட ரீதியற்ற முறையில் இடம்பெற்ற

தத்தெடுத்தல் மூலமாக ஏற்பட்டதாகவும் சட்டத்தரணிகளின் குறிப்புக்களில் இருந்து தெரியவருகின்றது. சட்டரீதியாக பிள்ளை ஒன்றினை தத்தெடுக்காத போது அப்பிள்ளை சட்டரீதியான உரிமைகளைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. மேலும் பிள்ளைகளைக் கைவிடும் நிலைமை, பிள்ளை பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படல் மற்றும் ஊழிய சுரண்டல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றதாக குறிப்பிடப்படுகின்றது (Selvakunapalan, 2020)[18]. இதன் விளைவாக சீனா, தென்கொரியா, குடமாலா, ரஸ்யா மற்றும் உக்ரைன் போன்ற நாடுகள் சர்வதேச தத்தெடுப்புக்களுக்கான தகுதி விதிகளை மிக இறுக்கப்படுத்தி, அதற்கு மாறாக உள்நாட்டு தத்தெடுப்பிற்கு முக்கியத்துவமளித்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது (Eke, 2014)[19].

பண்டைய பாபிலோனியா, ரோம மற்றும் கிரேக்க காலத்திருந்து வழக்கிலிருந்த தத்தெடுப்பு விதிமுறைகளை மையமாக வைத்தும் அவற்றில் காணப்பட்ட பல்வேறு குறைபாடுகளை நிவர்த்திசெய்தும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் தத்தெடுப்புச் சட்டங்களை உருவாக்க 1800 காலப்பகுதிக்குப் பின்னர் ஆரம்பித்திருந்தனர் (Bernal, 2007)[20]. இம்முனைவுகளுக்கு எதிராக கண்டங்களும் எதிர்ப்புக்களும் எழுந்த போதிலும் குழந்தைகளின் நலனில் அக்கறை கொள்ளுதல் எனும் கருத்தியல் வலுப்பெற்றதால் புதிய தத்தெடுப்புச் சட்டங்கள் இயற்றப்படுவது தவிர்க்கமுடியவில்லை (Ishizawa, et al, 2013)[21]. முதலாவது நவீன கால தத்தெடுப்பு சட்டம் 19 ம் நூற்றாண்டின் அரைப்பகுதியில் உருவாக்கப்பட்டத்தக்கான வரலாற்று சான்றுகள் உள்ளன. இப்புதிய கருத்தியல் கட்டமைப்பின் செல்வாக்கின் கீழ் தத்தெடுப்பு என்பது பரம்பரையை தக்க வைப்பதற்கான ஒரு சட்டப் பொறிமுறையாக மட்டுமல்லாது குழந்தைகளின் நலனை மேம்படுத்துவதற்கான ஒரு வழிமுறையாகவும் ஆக்கப்பட்டது (Olanike, 2015)[5] எனலாம். அமெரிக்கா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் தத்தெடுப்பு வீதம் அதிகரித்துக் காணப்பட்டமை இவ்வாறான சட்டங்கள் உருவாகுவதற்கான சூழலமைவை ஏற்படுத்தியிருக்க கூடும்.

சிறுவர்களுக்கான முதலாவது தத்தெடுப்பு சட்டமாக, மஸ்சசுசெட்ஸ் குழந்தை தத்தெடுப்பு சட்டம் (Massachusetts Adoption of Children Act) உலகளாவிய ரீதியாக அங்கீகரிக்கப்பட்டது. இச்சட்டமானது 1851ஆம் ஆண்டு அமெரிக்காவில் இயற்றப்பட்டது. இச்சட்ட உருவாக்கத்தின் பிற்பாடு உலகிலுள்ள பல நாடுகள் தத்தெடுப்பு பற்றிய புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தியது. உதாரணமாக, நியுசிலாந்து, 1881 ல் குழந்தை தத்தெடுப்பு சட்டத்தினை (Adoption of Children Act,1881) அறிமுகப்படுத்தி பொதுநலவாய நாடுகளுள் முதலாவது தத்தெடுப்பு சட்டத்தினை உருவாக்கிய நாடாக அடையாளப்படுத்தப்படுகின்றது. அதுபோல 1896 ல் அவுஸ்ரேலியா, 1900ல் ஜெர்மனி,1907 ல் சுவிட்சர்லாந்து,1914ல் அவுஸ்ரேலியா,1917 ல் சுவீடன்,1920 ல் கனடா,1923 ல் டென்மார்க்,1923ல் தென்னாப்பிரிக்கா,1926 ல் இங்கிலாந்து,1936ல் பேரு,1939 ல் பிரான்ஸ்,1939 ல் போலந்து,1940 ல் கிரிஸ்,1945 ல் உருகுவே, 1947 ல் டென்மார்க்,1948 ல் ஆஜன்டீனா,1952 ல் அயர்லாந்து மற்றும் 1956ல் இந்தியா போன்ற நாடுகளும் தத்தெடுப்பு சட்டங்களை உருவாக்கியதாக குறித்துக் காட்டப்படுகின்றது (Barroso, et al, 2017)[22].

பல்வேறு பட்ட நாடுகள் இரண்டாம் உலகப் போரின் பின்னரான காலப்பகுதிகளில் தத்தெடுப்பு தொடர்பான பல புதிய சட்டங்களை இயற்றியது. உதாரணமாக, தன்சானியாவில் முதலாவது தத்தெடுப்பு சட்டமான, குழந்தை தத்தெடுப்பு கட்டளைச் சட்டம் (Adoption of Infant Ordinance,1942) 1942ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இது ஆங்கில குழந்தை தத்தெடுப்பு சட்டம், 1926 யை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. நைஜீரியாவில் குழந்தைகள் தத்தெடுப்புச் சட்டம் 1965 ஆம் ஆண்டு கிழக்கு நைஜீரியாவில் இயற்றப்பட்டதுடன், இது 1965

ஆம் ஆண்டின் கிழக்கு நைஜீரிய தத்தெடுப்புச் சட்டம் (Eastern Nigeria Adoption law, 1965) எனவும் அழைக்கப்படுகின்றது. இந்தியாவில் இந்து தத்தெடுப்புக்கள் மற்றும் பராமரிப்புச் சட்டம், 1956 (Hindu Adoption and Maintenance Act, 1956) ல் அறிமுகப்படுத்தப்பட்டது (Wang, et al, 2018)[14]. இலங்கையில் தத்தெடுப்பு கட்டளைச் சட்டமான, பொதுச் சட்டத்தின் கீழ், பிள்ளையொன்றை தத்தெடுக்கும் போது சில விதிமுறைகளை வழங்கியுள்ளது.

**தத்தெடுப்புத் தொடர்பான ஒப்பந்தங்கள்**

உலகெங்கிலும் சிறுவர்கள் உரிமைகளை பாதுகாக்க அவர்கள் தொடர்பான சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. இருந்தபோதிலும் சிறுவர்கள் இன்னும் தங்களின் முழு உரிமைகளை பெறாமல் உள்ளனர். மேலும் சர்வதேச தத்தெடுப்புகள் குழந்தை விற்கப்படுதல் மற்றும் கடத்தப்படல் போன்றவற்றிற்காக பயன்படுத்துவதனை சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. இதன் விளைவாக உலகில் பல நாடுகளிலும் குழந்தை தத்தெடுப்பு எனும் கருப்பொருளில் பல மாநாடுகள் கூட்டப்பட்ட வண்ணமுள்ளன. எனவே சிறுவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளையும், சவால்களையும் குறைப்பதற்காக உலகின் பல நாடுகள் தத்தெடுத்தல் தொடர்பான ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளன (United Nation, 2009[1]., Hamilton, 2007[23]., Fioole, 2015[24]., Higgins, et al, 2008[25]., Johnson, 2002)[26].

1961 ல் உருவாக்கப்பட்ட United Nations Convention on the Reduction of Statelessness எனும் ஒப்பந்தத்தில் சிறுவர்களின் நலனை பாதுகாப்பதும், தத்தெடுப்பால் ஏற்படும் விளைவுகளான சிறுவர் துஷ்பிரயோகம், கடத்தல் மற்றும் குழந்தைகள் விற்கப்படுதல் போன்றவற்றில் இருந்து பாதுகாப்பதனை உறுதி செய்யவும் இது மேற்கொள்ளப்பட்டது. உலகிலுள்ள 33 நாடுகள் இதனை ஏற்றுக்கொண்டுள்ளன (United Nation, 2009[1].,Hamilton, 2007)[23]. 1963ஆம் ஆண்டில் Convention on Jurisdiction, Applicable Law Recognition of Decrees, Relating to Adoption எனும் ஒப்பந்தத்தினை ஆஸ்திரிய, அவுஸ்ரேலியா மற்றும் ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. இதில் தத்தெடுப்பதற்கான நடைமுறைகள் பற்றிய வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

சிறுவர்களைத் தத்தெடுத்தல் தொடர்பான ஐரோப்பிய (European Convention on the Adoption of Children, 1967) மாநாட்டின் ஒப்பந்தங்கள் ஏப்ரல், 1968 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்ததுடன் 46 ஐரோப்பிய கவுன்சிலிங் உறுப்பு நாடுகளில் 18 நாடுகள் ஒப்புதல் அளித்தன. இம்மாநாடு ஐரோப்பிய கவுன்சில் உறுப்பு நாடுகளிடையே தத்தெடுப்பு சட்டங்களை ஒருங்கிணைக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டது. குழந்தை நலனை மேம்படுத்துவதனை பொதுக் கொள்ளையாக வைத்தே இது இடம்பெற்றது எனலாம். குழந்தையை தத்தெடுப்பதால் ஏற்படும் முறையற்ற பங்கு இலாபத்தை (Improper Financial Advantages) தடை செய்வதுடன் எனவும் தத்தெடுக்கப்பட்ட குழந்தைக்கு, வளர்ப்புப் பெறோர்களின் தேசியம் போன்றதொரு தேசியம் இல்லாத நிலையில், வளர்ப்புப் பெறோரின் தேசியத்தை பெறுவதற்கு வசதி செய்து கொடுக்கப்படல் வேண்டும் என்றும் குறித்துக் காட்டப்பட்டுள்ளது (United Nation, 2009[1].,Hamilton, 2007[23].,Higgins, et al, 2008)[25]. United Nations Declaration in Social and Legal Principles Relating to the Protection and Welfare of Children with Special Reference Foster Placement and Adoption Nationally and Internationally பிரகடனம் டிசம்பர் 3ம் திகதி 1986 ஆம் ஆண்டு பொதுச்சபை (General Assembly) தீர்மானத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒரு குழந்தை தத்தெடுப்பின் மூலமாக, தனது பெயர், இனம் மற்றும் சட்ட பிரதிநிதித்துவம் என்பனவற்றை

இழக்கக்கூடாது என்று இதன் 8 விதிமுறைகள் குறித்து நிற்கின்றது. ஒரு குழந்தை வளரும் நாட்டின் பொருத்தமான வளர்ப்புப் பெற்றோரை இனம் காண முடியவில்லை என்றால் மாத்திரமே நாடுகளுக்கிடையில் தத்தெடுப்பு மேற்கொள்ள முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (United Nation, 2009[1].,Hamilton, 2007)[23].

சிறுவர் உரிமைக்கான ஐக்கிய நாடுகள் 1989ம் ஆண்டு மாநாட்டு (United Nation Convention on the Right of the Child) விதி 21(b) தத்தெடுத்தல் மூலம் தத்தெடுக்கப்பட்ட குழந்தை, அதே உள்நாட்டிலுள்ள குழந்தை (Domestic Child) அனுபவிக்கும் அதே உரிமைகள் பாதுகாப்புகளை அக்குழந்தையும் அனுபவிக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றது. 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் ல் இம்மாநாடு நடைமுறைக்கு வந்ததுடன் மாநாட்டில் 193 நாடுகள் கலந்து கொண்டு, இதற்கு ஒப்புதல் அளித்தது. இம்மாநாட்டினை தொடர்ந்து எகிப்து, ஜோர்டான், குவைத், சிரியா மற்றும் துபாய் போன்ற நாடுகள் தத்தெடுத்தல் தொடர்பான சட்ட ஏற்பாடுகளை உருவாக்க முனைந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும் (United Nation, 2009[1].,Hamilton, 2007[23]., Higgins, et al, 2008)[25].

ஹேக் மாநாடு என்றும் அழைக்கப்படும் Convention on Protection of Children and Co-operation in Respect of intercountry Adoption, 1993 மாநாடுத் தீர்மானங்கள் நாடுகளுக்கிடையில் இடம்பெறும் தத்தெடுப்புக்களை ஒழுங்குபடுத்துவதாக அமைந்துள்ளது. இதன் இரு பிரதான நோக்கங்களாக, தத்தெடுத்தலானது, குழந்தையின் நலனுக்காகவே இடம்பெறுகின்றது என்பதனை உறுதி செய்தல் மற்றும் குழந்தை விற்பனை மற்றும் கடத்தல் போன்றவற்றினை தடுத்தல் என்று விதிமுறை 1 சுட்டிக்காட்டுகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் 25 மே 2000 ம் ஆண்டு 54 வது அமர்வில் United National Optional Protocol to the Convention on the Rights of the Child on the Sale of Children, Child Prostitution and Child Pornograph, 2000 எனும் ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதில் உள்நாட்டிலோ அல்லது சர்வதேச ரீதியாகவோ, தனிநபர் அல்லது குழு அமைப்பு மூலமாகவோ வற்புறுத்தப்பட்டு தத்தெடுத்தல் மேற்கொள்ளப்படுவது தண்டனைச்சட்டக் கோவையின் கீழ் (Penal Code) குற்றமாக கருதப்படும் என்று குறிப்பிடுகின்றது (United Nation, 2009[1]., Hamilton, 2007)[23].

இவ்வாறான ஒப்பந்தங்கள் மூலம் சிறுவர்களை பாதுகாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். அது போல தத்தெடுத்தல் ஊடாக இடம்பெறும் பாலியல் துஷ்பிரயோகம், கடத்தல், விற்பனை மற்றும் வேலைக்கமர்த்தல் என்பன இவ்வாறான ஒப்பந்தங்கள் மூலமாக குறைக்கப்படும் எனவும் சில ஆய்வு முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றது (United Nation, 2009[1]; Hamilton, 2007[23]). உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் ஒன்றியங்கள், சம்மேளனங்கள் மற்றும் கருத்தரங்குகள் ஊடாக தத்தெடுத்தல் தொடர்பான விடயங்கள் ஆராயப்படுகின்றதில் சந்தேகமில்லை.

**தத்தெடுக்கும் பெற்றோர்களுக்கான தகுதி விதிகள்**

தத்தெடுப்பு சட்டங்கள் தத்தெடுக்கும் பெற்றோருக்கான தகுதி விதிகளைப் பிரஸ்பதாபிக்கின்றன. இத்தகைய தகுதிவிதிகள் பற்றிய கூறுகளை பண்டைய சட்டமரபுளும் கொண்டிருந்ன என்பதை கிரேக்கச் சட்டத்தின் “ஒரு தம்பதியினருக்கு முறையான குழந்தைகள் இருப்பின் அவர்கள் தத்தெடுக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் எனும் கூற்று (Bernal, 2007[20]) உணர்த்தவல்லது. எனினும் இது பற்றி முதன் முதலாக அமெரிக்காவில் 1851 ல் இயற்றப்பட்ட மஸ்சசுசெட்ஸ் குழந்தை தத்தெடுப்பு சட்டத்தில் (Massachusetts Adoption of Children Act) தெளிவாகப் பேசப்பட்டுள்ளது. இச்சட்டக்கோவைவிலுள்ள மிக முக்கியமான அம்சம் என்னவெனில் வளர்ப்புப்

பெற்றோருக்கு, ‘‘குழந்தை வளர்ப்பதற்கான போதுமான திறன் உள்ளதா? மற்றும் பொருத்தமான கல்வியை வழங்குவதற்கான ஆளுமை இருக்கின்றதா?’’ என்பதாகும். அதனை மதிப்பீடு செய்வதற்கான அதிகாரத்தை நீதிபதிக்கு வழங்குவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். அதன் பிரிவு.1. படி பொதுநலவாய நாடுகளின் குடிமக்கள் எவரும், எந்தவொரு குழந்தையினையும் பிறப்பிலேயே தத்தெடுப்பதற்கான ஒரு கோரிக்கையினை, அக்குழந்தை வசிக்கும் மாவட்டத்திலுள்ள நன்னடத்தை நீதிபதிக்கு மனு செய்யலாம். அதன் பிரிவு.4. சட்டபூர்வமான மனைவியைக் கொண்ட ஒரு நபரின் எந்தவொரு மனுவும், அம்மனைவி அதில் பங்கு கொள்ளாமல் மனு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என பிரஸதாபிக்கினறது. மேலும் பிரிவு.5. மனுதாரர்கள் (கணவன் மற்றும் மனைவி) குழந்தையை வளர்ப்பதற்கான போதுமான திறனைக் கொண்டிருகிறார்களா?, பெற்றோரின் தகுதி, நிலை மற்றும் பொருத்தமான வளர்ப்பையும் கல்வியையும் வழங்கும் ஆளுமை காணப்படுகின்றதா? என்பது பற்றி தகுதிகாண் நீதிபதி விசாரணை செய்ய வேண்டும் என வரையறுக்கின்றது.

1881 ல் குழந்தை தத்தெடுப்பு சட்டத்தினை அறிமுகப்படுத்திய நியுசிலாந்து தத்தெடுப்பிற்கான தகுதிவிதிகளைக் கொண்டமைந்திருந்தது. பின்னர் பல்வேறுபட்ட சட்டங்களும் யாப்புக்களும் ஐக்கிய நாடுகள் சபையினாலும் ஏனைய நாடுகளினாலும் உருவாக்கப்பட்டு அதன் நீட்சி வலுவானது. இந்தியாவில் இந்து தத்தெடுப்புக்கள் மற்றும் பராமரிப்புச் சட்டம் 1956இல் இயற்றப்பட்ட பின்னர் இந்துக்களுக்கான தத்தெடுப்பு மற்றும் பராமரிப்பில் வேறு சில மாற்றங்கள் உருவானதாக குறிப்பிடப்படுகின்றது. யார் தத்தெடுக்கலாம், தத்து கொடுக்கலாம் என்பது குறித்த வரையறைகள் மாற்றம் பெற்றதுடன ் இச்சட்டம் வருவதற்கு முன்பு ஆண்கள் மட்டுமே ஆண் குழந்தையை தத்தெடுக்கலாம் எனவும் கணவன் தத்தெடுத்த குழந்தையை மனைவியே வளர்த்தாலும், அதற்கு மனைவியின் அனுமதி தேவையில்லை என்ற விதிமுறைகள் அனைத்தும் இந்த சட்டத்திற்குப் பின் மாறுதல் கண்டதாக அடையாளபடுத்தப்பட்டுள்ளது. புத்தித் தெளிவோடு இருக்கின்ற வயது வந்த எந்த ஒரு இந்து ஆண் ஒரு மகனையோ, மகளையோ தத்தெடுக்கலாம். மனைவி இருந்தால் அவள் ஒப்புதலோடு மட்டுமே தத்தெடுக்க முடியும் போன்ற வரையறைகளை இச்சட்டம் விதித்தாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இந்து, பௌத்தம், சீக்கியம் மற்றும் ஜெயின் மதங்களைச் சேர்ந்தவர்கள் “இந்து தத்தெடுத்தல் மற்றும் பராமரித்தல் சட்டம், 1956’’, மூலமாகவும், முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ மதங்களைச் சேர்ந்தவர்கள் ‘‘பாதுகாவலர் சட்டம்’’ (Guardians and Wards Act, 1890) மூலமாகவும் குழந்தைகளை தத்தெடுக்க முடியும் என சுட்டிக்காட்டப்படுகின்றது (Mignot,2019[14]., Wang, et al, 2018[15]). இலங்கையில் தத்தெடுப்பு கட்டளைச் சட்டமான, பொதுச் சட்டம் பிள்ளையொன்றை தத்தெடுக்கும் நபர்களின் தகுதிவிதிகளை வழங்கியுள்ளது. ‘‘தத்தெடுக்க விரும்பும் நபர் நீதிமன்றத்தில் சட்டரீதியாக விண்ணப்பம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும்’’. ‘‘ஒரு ஆண் மாத்திரம் பெண் குழந்தையினை தத்தெடுக்க முடியாது’’. இச்சட்டத்தின்படி “கணவன் மற்றம் மனைவியின் சம்மதம் வேண்டப்படும்’’. சிறுவர்களைத் தத்தெடுததல் தொடர்பான ஐரோப்பிய மாநாட்டின் ஒப்பந்தங்கள் வளர்ப்புப் பெற்றோர்கள் 21 - 35 வரையான வயதிற்குள் இருக்க வேண்டும். மேலும் வளர்ப்புப் பெற்றோரின் பொருத்ததினை உறுதிப்படுத்துவதற்கு திறமையான அதிகாரியின் விசாரணை தொடர்ச்சியாக இடம்பெறுகிறது என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும் என பிரஸ்தாபித்து தகுதிநிலையை உறுதிசெய்துள்ளன.

**உயிரியல் பெற்றோரின் சம்மதம்**

அமெரிக்காவின் மஸ்சசுசெட்ஸ் குழந்தை தத்தெடுப்பு சட்டம் (1851) விதிமுறைகளுக்கு அமைவாக உயிரியல் பெற்றோரின் எழுத்து மூல சம்மதம் மற்றும் கணவன் மற்றும் மனைவியில்

கூட்டு விண்ணப்பமும் வேண்டப்படுகின்றது. அதன் பிரிவு.2. பின்வருமாறு விபரிக்கிறது. "அத்தகைய குழந்தையின் பெற்றோரில் இருவரோ அல்லது ஒருவரோ வாழ்ந்திருந்தால், அவர்கள் தத்தெடுப்புக்கு எழுத்துப்பூர்வமாக ஒப்புக்கொள்ள வேண்டும்: பெற்றோர் இருவரும் வாழவில்லை என்றால், அத்தகைய குழந்தையின் சட்டப்பூர்வ பாதுகாவலர் அல்லது சட்டப்பூர்வ பாதுகாவலர் இல்லை என்றால், மாநிலத்திற்குள் அத்தகைய குழந்தையின் உறவினர்கள் அத்தகைய சம்மதத்தை வழங்கலாம். அத்தகைய உறவினர்கள் யாரும் இல்லையென்றால் புத்திசாலித்தனமான மற்றும் பொருத்தமான ஒரு நபரை நியமனம் செய்யலாம், மேலும் அந்நபர் அத்தகைய சம்மதத்தை கொடுக்கலாம் அல்லது மறுப்புத் தெரிவிக்கலாம்." மேலும் பிரிவு 3. குழந்தைக்கு பதினான்கு வயது அல்லது அதற்கு மேற்பட்டு இருந்தால், தத்தெடுப்பானது அவரது அனுமதியின்றி மேற்கொள்ளப்படமாட்டாது (Barroso, et al, 2017[22]). இலங்கை பொதுச்சட்டம் 14 வயதுக்குக் குறைந்த பிள்ளையொன்றைத் தத்தெடுக்கலாம் எனக் கூறி, ஆயினும் 10 வயதுக்கு மேற்பட்ட 14 வயதுக்கு உட்பட்ட பிள்ளையின் உடன்பாடு பெறப்படுதல் அவசியமாக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயம், பிள்ளையின் கருத்துக்களுக்கு பெற்றோர், நீதிமன்றம் முக்கியத்துவம் அளிக்க வேண்டுமெனக் கூறுகிறது. உடன்பாடு என்பது "அச்சுறுத்தல், தூண்டுதல் இல்லாது சுதந்திரமாகப் பெறப்பட வேண்டும்" (Lawnet, 2016)[27].

சில சமயங்களில் பொரளாதார நலனடகளுக்காக பிள்ளையை ஒப்படைக்கும் பெற்றோர் பிள்ளையின் உடன்பாட்டிற்கு முக்கியத்துவம் வழங்குவதில்லை. வாழ்க்கையின் முக்கியமான விடயங்களைத் தீர்மானிக்கும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. பிள்ளையின் விருப்பத்திற்கு மாறாக பெற்றோர் அல்லது பாதுகாவலர் செயற்படுகின்ற போது அப்பிள்ளை உடல் உள வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படுகின்றது எனவும் இது அப்பிள்ளையின் கல்வி, ஆளுமை விருத்தி என்பவற்றிற்கு குந்தகம் விளைவிக்கும் எனவும் குறிப்பிட்டுக் காட்டப்படுகின்றது (Lawnet, 2016[27]).

**சொத்துரிமை**

மனித உரிமை என்பது எல்லா மனிதர்களுக்கும் உரித்தான அடிப்படை உரிமைகளும், சுதந்திரங்களும் ஆகும். இந்த உரிமைகள் மனிதர்கள், மனிதர்களாக பிறந்த காரணத்தால் அவர்களுக்கு கிடைத்த அடிப்படையான விட்டுக்கொடுக்க இயலாத மறுக்க முடியாத சில உரிமைகளாக கருதப்படுகின்றன. இனம், சாதி, நிறம், சமயம், பால், தேசியம், வயது, உடல், உளம் ஆகியவற்றுக்கு அப்பால் ஒவ்வொரு தனிமனிதருக்கும் இருக்கும் அடிப்படையான உரிமைகள், மனிதர்கள் சுதந்திரமாக, நிம்மதியாக, நலமாக வாழ அவசியமான உரிமைகளாக கருதப்படுகின்றன. அந்தவகையில் சொத்துரிமை, மனித உரிமைகளுள் அடங்குவதாக எடுத்தியம்பப்படுகின்று (Naja et al., 2018)[28]. தத்துக் குழந்தைகளுக்கு சொத்துரிமையில் பங்கு என்பது இதன் நீட்சி எனலாம்.

பண்டைய சட்ட மரபுகள் தத்தெடுத்த குழந்தைக்கான சொத்துரிமை பற்றிய கூறுகளைக் கொண்டிருந்தன. பபிலோனியரின் ஹம்முராபியின் சட்டக் கோவையின் (Code of Hammurabi) 191வது விதி "வளர்ப்புப் பெற்றோர் தத்தெடுப்பு ஒப்பந்தத்தை முறித்துக்கொள்ள விரும்பினால், அக்குழந்தைக்கு அவர்களது சொத்தில் மூன்றில் ஒரு பங்கினை கொடுத்து அனுப்பவேண்டும். எனினும் வீடு, காணி மற்றும் தோட்டம் என்பவற்றினை அக்குழந்தையால் உரிமை கோரமுடியாது" எனவும் பிரஸ்தாபிக்கின்றது. இவ்வாறே கிரேக்க சட்டமும் "தத்தெடுப்பின் பின்னர் ஆண் குழந்தைகள் பிறந்தால் தத்தெடுக்கப்பட்ட குழந்தைக்கும் பிறந்த குழந்தைக்கும் அப்பெற்றோரின் வாரிசுத் சொத்துக்கள் சமமாக பிரிக்கப்பட்டு வழங்கப்படுவதுடன் தத்தெடுப்பு

ஒப்பந்தம் முடிவுக்குகொண்டு வருவதாகவும் குறிப்பிடுவது (Bernal, 2007)[20] ஈண்டு கவனிக்கத்தக்கது.
ஆயினும் தத்தெடுப்பு குழந்தைகளுக்கான சொத்துரிமை அயர்லாந்தில் குழந்தை தத்தெடுப்பு சட்டத்தில் முதலில் உறுதிசெய்யப்பட்டது எனலாம். எடுத்துக்காட்டாக அயர்லாந்து, முதலாவது தத்தெடுப்பு சட்டத்தினை (Adoption Act,1952) இயற்றியதுடன் இச்சட்டத்தில் முறையான சந்ததியினருக்கு உள்ள உரிமை மற்றும் கடமை போலவே வளர்ப்புக் குழந்தைகளுக்கும் உண்டு என்பதை அங்கீகரித்ததுடன் மேலும் வளர்ப்புக் குழந்தைகள் அவர்களின் தத்துப் பெற்றோரின் வாரிசு சொத்தில் பங்கு பெறும் உருத்தினை உறுதிப்படுத்தியுள்ளது (Ben-Nun, 2016)[10]. இலங்கையிலுள்ள விசேட சட்டங்களிலும் (Special Laws) குறிப்பாக சொத்துரிமை தொடர்பாக தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது. கண்டியன் சட்டத்தில் (Kandyan Law) மிக முக்கியமான சிறப்பம்சம் என்னவெனில் தத்தெடுக்கப்பட்ட குழந்தையானது தனது உயிரியல் பெற்றோர் மற்றும் வளர்ப்பு பெற்றோா் ஆகிய இரு தரப்பினரிடமிருந்து வாரிசுத் சொத்துரிமையில் பங்கு பெறும் உரிமை உண்டு என்பதாகும். இவ்வம்சமானது இலங்கையிலுள்ள ஏனைய எல்லா சட்டங்களிலிருந்தும் வேறுபட்டுக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். எனினும் தத்தெடுக்கப்பட்ட குழந்தையின் வாரிசுத் சொத்திலிருந்து வளர்ப்புப் பெற்றோருக்கு பங்கு கிடைக்கப்பெறமாட்டது என்று இச்சட்டம் குறிப்பிடுகின்றது(Sivachandran, 2018)[29]. சிறுவர்களைத் தத்தெடுததல் தொடர்பான ஐரோப்பிய மாநாட்டின் ஒப்பந்த விதிகளும் பிறந்த குழந்தை அனுபவிக்கும் வாரிசுத் சொத்துரிமை மற்றும் இதர கடமைகள் போன்றே வளர்ப்புக் குழந்தையும் அனுபவிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளன.

தேசவழமைச் சட்டத்தின் (Tesawalamai Law) படி, தத்தெடுப்புத் தொடர்பான எந்தவிதமான சட்ட ஏற்பாடுகளும் இச்சட்டத்தில் காணப்படவில்லை. எனவே, இலங்கை வாழ் தமிழர்கள், பொதுச்சட்டத்தினை (Common Law) பின்பற்றித் தத்தெடுக்கின்றனர். இருப்பினும், ஒல்லாந்தர் இலங்கைக்கு வருகை தருவதற்கு முன்னர் இச்சட்டத்தின் கீழ் சில நடைமுறைகள் காணப்பட்டன. எனினும் அவை தற்காலத்தில் இச்சட்டத்திலிருந்து அகற்றப்பட்டு விட்டது. அவையாவன, வளர்ப்புக் குழந்தையானது வளர்ப்புப் பெற்றோரின் வாரிசுத் சொத்தில் பங்கு பெறும் அதேவேளை உயிரியல் பெற்றோரின் வாரிசுத் சொத்தில் பங்கு பெறமுடியாது என்றும் குறிப்பிட்டிருந்தது (Sivachandran, 2018)[20]. இவை அனைத்தும் தேசவழமைச் சட்டத்தில் பின்பற்றப்பட்ட விடயங்களாகும்.

முஸ்லிம் தனியார் சட்டத்தினைப் பொறுத்தளவில் ஒரு முஸ்லிமின் திருமணம், வாரிசுரிமை தொடர்பாக குறிப்பிட்டு இருக்கின்றது. எனினும் முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தின் கீழ் குழந்தை தத்தெடுப்பு சட்டம் தொடர்பாக எந்தவித குறிப்புக்களும் காணப்படவில்லை என்பது முக்கிய அம்சமாகும். ஏனனில் இஸ்லாமிய ஷரீஆ 1400 வருடங்களுக்கு முன்பே தத்தெடுப்பினை தடை செய்து விட்டது. இருப்பினும் இலங்கையில் கவுஸ் எதிர் கவுஸ் (Azhar Ghouse V Muhomed Ghouse (1986) SLR 48)எனும் வழக்கில் இஸ்லாமிய ஷரீஆ குறிப்பிட்டதற்கு இணங்க தீர்ப்பு வழங்கியமை பாரிய வெற்றியாகும். அதாவது ஒரு முஸ்லிம் நபர், குழந்தை ஒன்றினை தத்தெடுத்து பிறகு, அவர் வஸிய்யத் (இறுதி விருப்பு ஆவணம்) மேற்கொள்ளாமல் மரணித்தாலும் கூட 1931 ஆம் ஆண்டு பிரிவு 6(3) 10ஆம் இலக்க முஸ்லிம் வாரிசுத் சொத்து கட்டளைச் சட்டத்தின் (Section 6(3) of the Muslim Intestate Succession Ordinance No. 10 of 1931)படி, அக்குழந்தைக்கு வாரிசுத் சொத்தில் பங்கு கிடைக்கப்பெறும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இவ்வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு (Court of Appeal) கொண்டு வரப்பட்ட போது நீதியரசர் ஜெமீல் இவ்வாறு தீர்ப்பளித்தார். "ஒரு முஸ்லிம், முஸ்லிம் சட்டத்தின் கீழ் தத்தெடுத்தால் அக்குழந்தைக்கு வாரிசுத் சொத்தில் பங்கு கிடைக்கப்

பெறமாட்டது என்று கூறி, அல்குர்ஆனின் (சூரா நிஸா:23) வசனத்தை சுட்டிக்காட்டினார்". 1931 ஆம் ஆண்டு பிரிவு 6(3)குழந்தை தத்தெடுப்பு கட்டளைச் சட்டமானது பிழையாக விளக்கமளிக்கப்பட்டதன் காரணமாக இவ்வழக்கு உயர் நீதிமன்றுக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு தீர்ப்பளிக்கப்பட்டதாவது, "(Cap. 72 of the Unofficial Legislative Enactments of Sri Lanka -1980 Edition) எனும் சட்டம் உருவாக்கப்பட்டு, ஒரு முஸ்லிம், முஸ்லிம் சட்டத்தின் கீழ் தத்தெடுத்தால், அக்குழந்தைக்கு வாரிசுத் சொத்தில் பங்கு கிடைக்கபெறமாட்டது என்று அறிவுறுத்தப்பட்டது" (Marsoof, 2020)[30].

**குழந்தை உரிமைகள், நலன்கள்**

ஒரு குழந்தையின் பாதுகாவல், பராமரிப்பு என்பன அதனை வளர்க்கும் பெற்றோரிடத்தில் தங்கியுள்ளது. சட்ட ரீதியாக குழந்தை ஒன்று தத்தெடுக்காத போது அப்பிள்ளை சட்டரீதியான உரிமைகளை பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் ஏற்படுகின்றன என்கிறார் சிவச்சந்திரன் (Sivachandran, 2018[30]). மேலும் பிள்ளைகளை கைவிடும் நிலைமை, பிள்ளைகளை பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கல் மற்றும் ஊழியர் சுரண்டல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இன்று பிள்ளைகளை கடத்தி விற்பனை செய்வதுடன் பிள்ளைகளைத் தவறான பாவனைக்கும் பயன்படுத்துகின்றனர் என ஆய்வு முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றது. (Onayemi et al, 2019)[31]. உள்நாட்டில் மட்டுமன்றி பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு தவறான தொழில்களில் ஈடுபடுத்தவும் குறைந்த சம்பளத்தில் வேலைக்கு அமர்த்தவும் பயன்படுத்துகின்றனர் என்பதையும் அறியக் கூடியதாக உள்ளது (தினகரன், 2011)[32].

தத்தெடுக்கப்படும் குழந்தைகளின் உரிமைகள் மற்றும் நலன்கள் பாதுகாக்கப்படுவதை சட்ட ரீதியான பொறிமுறை ஊடாக உறுதிசெய்திருப்பதை அவதானிக்க முடிகிறது. அமெரிக்காவின் மஸ்சசுசெட்ஸ் குழந்தை தத்தெடுப்பு சட்டம் (1851) விதிமுறையின் பிரிவு.7 இன்படி குழந்தையின் உயிரியல் பெற்றோர் தத்தெடுக்கும் ஆணையால், அத்தகைய குழந்தையினுடைய எந்தவொரு சட்ட உரிமைகளையும் இழக்க நேரிடும். அத்தகைய குழந்தை அதனது உயிரியல் பெற்றோருக்கு ஆற்ற வேண்டிய, பராமரிப்பு மற்றும் கீழ்ப்படிதல் போன்ற அனைத்து சட்டபூர்வமான கடமைகளிலிருந்தும் விடுவிக்கப்படும். இது தத்துக்குழந்தை இரு சாராரிடம் சிக்கித்தவிப்பதை தடைசெய்கிறது. பொதுவாக, இச்சட்ட ஏற்பாடுகள் குழந்தை துஷ்பிரயோகத்தை பெருமளவில் குறைத்துவிட்டன எனலாம். குழந்தைகளின் நலன்களைப் பாதுகாப்பதற்காகவும், அவர்களின் வாழ்வு, வாழ்க்கைத்தரம் மற்றும் வளர்ச்சி என்பவற்றினை நிலை நிறுத்துவதற்காக 1990 ஆம் ஆண்டு குழந்தைகளின் உரிமைகள் மற்றும் நலன் குறித்த ஆபிரிக்க சாசனம் உருவாக்கப்பட்டதன் விளைவாக தத்தெடுப்புக்களில் இடம்பெறும் துஷ்பிரயோகம் போன்ற வன்செயல் இடம்பெறுவது குறைந்ததாக சில ஆய்வாளர்களின் ஆய்வு கண்டறிதல்கள் காட்டுகின்றன (Chinyere, 2013[33]., Oladokun, et al, 2009)[34].

கிரேக்க காலப்பகுதிகளில் தத்துக் குழந்தைகளின் நலனில் அக்கறை செலுத்தப்பட்ட போதிலும் அது தொடர்பாக சட்டங்கள் உருவாக்கப்பட்டு பேசப்படவில்லை. இருப்பினும் பிற்பட்ட காலப்பகுதிகளில் இது தொடர்பான சட்டங்கள் உருவாக்கப்பட்டு அதன் நோக்கங்கள் மற்றும் பரப்பை விரிவுபடுத்தின. இந்த வகையில் 1941 ம் ஆண்டு 24 ஆம் இலக்க குழந்தை தத்தெடுப்பு கட்டளைச் சட்டம் (Child Adoption Ordinance) இயற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1943 ஆம் ஆண்டு 54 ஆம் இலக்க கட்டளைச் சட்டம், 1964 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க சட்டம் போன்றனவும் இயற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. எத்தகைய சட்ட பூர்வ ஒழுங்கு முறைகளும் இல்லாமல் பிள்ளைகளை தத்தெடுக்கும் அல்லது சுவீகாரம் செய்யும் வழக்கம் பரவலாக காணப்பட்டமையினால் இந்தக் கட்டளைச் சட்டம் பிள்ளைகளை சுவீகாரம் செய்யும் சட்ட பூர்வ

முறை ஒன்றை வழங்கியது. இச்சட்ட ஏற்பாட்டின் மூலம் தத்தெடுப்பு என்ற போர்வையில் வீட்டு வேலைக்கும், பிள்ளைகளை அமர்த்தி சுரண்டும் வழக்கத்தினை தவிர்க்கவும் இது உதவி செயதுள்ளது (Laws of Sri Lanka, 2019)[36].

ஒவ்வொரு சிறுவனும் தனது அடிப்படை தேவைகளை பெற உரிமை உள்ளவன் எனவும் நாம் அவற்றை ஒவ்வொரு பிள்ளைக்கும் வழங்குவதில் முனைப்பாக இருக்க வேண்டும் எனவும் 1989 இல் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் சிறுவர் உரிமை சாசனத்தில் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. 1993 ஆம் ஆண்டு ஹேக் தத்தெடுப்பு மாநாட்டில் (Hague Adoption Convention) குழந்தைகளின் நலனுக்காகவும் சர்வதேச சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அவர்களது அடிப்படை உரிமைகளுக்காகவும், சட்டரீதியற்ற குழந்தை தத்தெடுப்பை தடுப்பதற்காகவும் பல விதிமுறைகள் அமுலாக்கப்பட்டது. இது போன்ற பல மாநாடுகள் உலகெங்கிலும் இடம்பெற்று வந்ததாக குறிப்பிடப்படுகின்றது (United Nation, 2009)[1]. ஹேக் மாநாட்டின் விதி 2 ஒரு குழந்தை அதன் நலன் கருதி தத்தெடுக்கப்படுகின்றதா என்பதனை அவதானிப்பதற்காக மாநில அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடுகின்றது. இதில் தத்தெடுப்பு இடம்பெறுவதற்கு முன்னர், குழந்தை பிறந்த மாநிலம் மற்றும் தத்து எடுக்கப்படும் மாநிலம் ஆகிய இரண்டையும் மத்திய அதிகாரிகள் ஒப்புக் கொள்ள வேண்டும் என்று விதிமுறை 4 அடையாளப்படுத்துகின்றது. குழந்தையினை தத்தெடுத்ததன் பிற்பாடு அக்குழந்தையினை பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பு மாநில மத்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று விதிமுறை 5 சுட்டிக்காட்டுகின்றது. தத்தெடுத்தல் தொடர்பாக இடம்பெறும் முறைகேடுகள் மற்றும் சீர்கேடுகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மாநில அதிகாரிகள் எடுக்க வேண்டும் என்று விதிமுறை குறிப்பிடுகின்றது (United Nation, 2009[1].,Hamilton, 2007[23]).

மேலும் இலங்கையில் சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளரால் அந்நாட்டு இல்லம் ஒன்றில் அல்லது வேறு அரசாங்கத்தினால் நடத்தப்படுகின்ற இல்லங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பிள்ளையொன்றை வெளிநாட்டவர் ஏற்கலாம் எனவும் ஏற்னவே குறிப்பிட்டது போல பிள்ளை அல்லது பாதுகாவலன் உடைய சம்மதம், மகவேற்பு பிள்ளையின் அக்கறையின் பொருட்டு செயற்படுகின்றது என்பதையும், நபர் அல்லது நிறுவனம் எந்தவிதமான பண ரீதியான பிரதிபலன் இன்றி பிள்ளையை வழங்க விரும்புகின்றனர் என்பதையும் உள்ளடக்கிய அறிக்கை ஒன்றை நீதிபதியிடம் சமர்ப்பித்தல் அவசியமாகும். மேலும் நீதிமன்ற முன் அனுமதியின்றி பணத்திற்கு பிள்ளை ஒன்றை வழங்கியிருந்தால் அது குற்றமாக கருதப்படும். அக்குற்றம் நிரூபிக்கப்பட்டால் ரூ. 10,000/- தண்டப் பணமும் இரண்டு வருட சிறைத் தண்டனையும் வழங்கப்படும் (Sivachandran, 2018)[29] எனும் நிபந்தனையானது குழந்தை தத்தெடுப்பு தொடர்பான பிறழ்வுகளில் இருந்து தவிர்ப்பதற்கான ஏற்பாடுகளை அமைத்துத் தந்துள்ளது.

தத்தெடுப்பு தொடர்பாக பொதுச் சட்டத்தில் (Common Law) குறிப்பிட்டு இருப்பினும், இலங்கையிலுள்ள விசேட சட்டங்களிலும் (Special Laws) இது தொடர்பாக தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது. தத்தெடுப்பின் போது கண்டியச் சட்டத்தின் (Kandyan Law) கீழ் சில நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அதாவது, தத்து எடுப்பவர் மற்றும் குழந்தை போன்றவர்கள் ஒரே சாதியினராக இருக்க வேண்டும் என்றும், வாரிசுத் சொத்துரிமையை உறுதி செய்வதன் மூலம் அக்குழந்தையை தனது சொந்தக் குழந்தையாக நிரூபிக்க முடியும் என்றும், தத்து எடுப்பவர் தனது நோக்கத்தை தெளிவாக குறிப்பிட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. கண்டியன் சட்டத்தின் கீழ், கண்டியச் சிங்களவர்கள், பருவமடைந்தவர்களையும் தத்தெடுக்க முடியும் என்றும், இச்சட்டத்தின் கீழ், தத்தெடுக்கப்பட்ட குழந்தை சொந்தக் குழந்தையாகவே கருதப்படும் என்றும், அக்குழந்தையை மகவேற்கும் போது நீதிமன்றம் முன்னிலையில் உயிரியல்

பெற்றோர் மற்றும் வளர்ப்பு பெற்றோரின் எழுத்து மூல சம்மதம் வேண்டப்படும் (Laws of Sri Lanka, 2019)[35] எனவும் குறிப்பிடப்பட்டிருப்பதானது தத்துக் குழந்தையின் மீதுள்ள அதிகபட்ச நலனை மையப்படுத்தி இருப்பதாக காணப்படுகின்றது.

1940-1980 களில் பல நாடுகள் ஏற்கனவே காணப்பட்ட சட்டங்களுக்குரிய திருத்தச் சட்டங்களை (Amendment) அறிமுகப்படுத்தியது. இவ்வாறான மாற்றங்கள் தத்தெடுப்பின் மூலம் ஏற்படும் விளைவுகளை விரிவுபடுத்துவதனையும் மற்றும் தத்தெடுக்கப்பட்ட நபரின் நலனை சிறப்பாக பாதுகாப்பதனையும் நோக்கமாக கொண்டிருந்தது. உதாரணமாக இங்கிலாந்து மற்றும் வேல்ஸில், 1949ம் ஆண்டின் குழந்தைகள் தத்தெடுப்பு சட்டத்தின் மூலம் முதன் முறையாக தத்தெடுக்கப்பட்ட குழந்தைக்கு, அதன் வளர்ப்புப் பெற்றோரின் வாரிசு சொத்தினை வழங்குவதன் மூலம் அக்குடும்பத்துடன் முழுமையாக இணைப்பதனை உறுதி செய்ததாக குறிப்பிடப்படுகின்றது (Fonseca, 2003)[36]. பல நாடுகள் தத்தெடுத்தல் தொடர்பான சட்டங்களை மாற்றியமைத்துடன், தத்தெடுத்தலின் புதிய வடிவங்களை அறிமுகப்படுத்தியது. உதாரணமாக, நியுசிலாந்தில் 1955 ம் ஆண்டின் தத்தெடுப்பு சட்டம் (Adoption Act of 1955) உருவாக்கப்பட்டு, அதில் வளர்ப்புக் குழந்தையானது தத்துக் குடும்பத்தின் சொந்தக் குழந்தையாகவே கருதப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது (Mignot, 2015[14]). போலந்தில் குழந்தைகளின் நலனை பாதுகாப்பளிப்பதில் நீதிமன்றங்கள் அக்கறை காட்டியதால் சட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டு, தத்தெடுப்பு என்ற கருத்தியலின் கீழ்,1965 ம் ஆண்டின் குடும்பம் மற்றும் பாதுகாவலர் சட்டக் கோவை (Family and Guardianship Code of 1965) உருவாக்கப்பட்டமை முக்கிய அம்சமாகும்(Jeanne, 2004[7]).

மேலே குறிப்பிட்டதன் படி தத்தெடுப்பின் முதன்மை நோக்கமான குழந்தை நலன் என்பது ஆரம்ப காலத்துடன் ஒப்பிடுகையில் சமீபத்திய வளர்ச்சியின் மைக்கல்லாகும். வரலாற்றின் பெரும் பகுதி முழுவதும், தத்தெடுப்பானது மத நோக்கங்களுக்காகவும், வளர்ப்புப் பெற்றோரின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவும், பரம்பரையை பாதுகாப்பதற்காகவும் மற்றும் அரசியல் அதிகாரத்தை பெறுவதற்காகவும் மேற்கொள்ளப்பட்டது. 20ஆம் நுற்றாண்டின் ஆரம்பத்தில் அமெரிக்காவில் உருவாக்கப்பட்ட தத்தெடுப்பு சட்டங்கள் வளர்ப்புப் பெற்றோரின் தன்மையினை மதிப்பீடு செய்வதற்கும், வளர்ப்புப் பெற்றோருக்கும் குழந்தைக்கும் இடையிலான உறவினை கண்காணிப்பதற்குமாண அவசியத்தை வலியுறுத்தின. இவ்வாறு உலகின் பல்வேறு நாடுகள் தத்தெடுப்பு தொடர்பான சட்டங்களை இயற்றி தத்தெடுப்பின் வடிவத்தினையும் அதன் நோக்கத்தினையும் மாற்றியமைத்தது என்பதில் ஐயமில்லை.

**முடிவுரை**

குழந்தை தத்தெடுத்தல் புராதன காலம் முதல் வழக்கில் உள்ள ஒரு மரபுமுறையாகும். துத்தெடுத்தல் தொடர்பான விதிமுறைகள் அக்காலம் முதல் நடைமுறையில் உள்ளது. பாபிலோனியாவின் ஹம்முராபியின் சட்டக் கோவையானது (Code of Hammurabi) இது பற்றிய முன்றேற்றகரமான, முன்னோடியான சட்ட ஏற்பாடு எனலாம். நவீன காலப்பிரிவில் தத்தெடுப்பு பற்றிய சட்டவாக்க முனைவுகள் மீதான கரிசனை கொள்ளப்பட்டுள்ளது. 20ஆம் நூற்றாண்டில் போர்கள் மற்றும் இயற்கைப் பேரிடர்கள் பெற்றோர்களை இழந்த குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரித்துவிட்டநிலையில் நாடு தாண்டியும் குழந்தை தத்தெடுப்பு நடைமுறைக்கு வந்தது. இது குழந்தை தத்தெடுத்தல் எனும் போர்வையில் குழந்தை வியாபாரம், கடத்தல், பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர் வேலையாள் என சிறுவர் உரிமைமீறல் மற்றும் சுரண்டலுக்கான வாய்ப்புகளை தோற்றுவித்து இருந்தது. குழந்தை தத்தெடுப்பு பற்றிய சட்டவாக்க முனைப்புகள் ஊடாகவே சிறுவர் உரிமைகளும் நலன்களும் பாதுகாக்கப் படமுடியும் என்ற சூழலில் நாடொன்றின் பொதுச்சட்டத்தில், தண்டனைக் கோவையில் தத்தெடுத்தல் தொடர்பான விதிகள் சேர்க்கப்பட்டன. விஷேடமாக பிரத்தியோக சட்டமூலங்களும் உருவாக்கப்பட்டன. குழந்தை தத்தெடுத்தல் நாடுகளிக்கிடையிலான ஒரு நடைமுறையாக பரிணமித்து காணப்பட்ட

நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டின் பயனாக சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் பிரகடனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த சட்ட ஏற்பாடுகளின் பிரதானமான உள்ளீடுகளாக தத்தெடுப்பவர்களின் தகுதி, உயிரியல் பெற்றோர் மற்றும் சிறுவர்களின் சம்மதம், வளர்ப்பு பெற்றோரின் பராமரிப்பு, சொத்துரிமை போன்றன பற்றிய விதிமுறைகள் அமைந்திருந்தது. தத்துக்குழந்தைகளின் உரிமைகள், நலன்களைப் பேணி, சிறுவர் துஷ்பிரயோகத்துக்கான வாய்ப்புகளை குறைத்துவிடுவதற்கான சட்ட ஏற்பாடுகளாக இவை அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**References:**


1. United Nation. (2009). Child Adoption: Trend and Policies. United Nation Publication. Retrievedfromhttps://www.un.org/en/development/desa/population/publications/pdf/policy/child - adoption.pdf
2. Rosenthal, J, A. (1993). Outcomes of adoption of children with special needs. *The future of Children Journal*, https://doi.org/10.2307/1602403
3. Muslim Women's Shura Council. (2011). *Adoption and the Care of Orphan Children: Islam and The Best Interests of The Child*. American Society for Muslim Advancement. Available at https://bettercarenetwork.org/
4. Walker, J. (2008). The Use of Attachment Theory in Adoption and Fostering. *Adoption & Fostering, 32*(1), 49-57. Doi: 10.1177/030857590803200107
5. Olanike, A, O., Pauline, E, O., Bernarel, E, O. (2015). Polices of Produce of Child Adoption in Nigeria: A Review Paper. *Mediterranean Journal of Social Science*, 6(1), 75-81.
6. Zameetha, A. L. F., & Jazeel, M. I. M. (2022). Islamic Alternatives for Child Adoption: A Litereature Review (குழந்தை தத்தெடுப்பு தொடர்பான இஸ்லாமிய மாற்றீடுகள்: ஓர் இலக்கிய மீளாய்வு). *KALAM International Research Journal Faculty of Arts and Culture*, South Eastern University of Sri Lanka. 15(2), 75-85.
7. Jeanne, A.H., Smith, S.L., & Scott D.R. (2004) A Comparative Study of Child Welfare Adoptions with Other Types of Adopted Children and Birth Children. *Adoption Quarterly, 7*(3). 1-30.doi: 10.1300/J145v07n03_01.
8. Efrat, A., Lebleng, D., Liao, S., Pandya, S, S. (2015). Babies across Boarders: The political Economy of International Child Adoption. *International students Quarterly*, 59(3), 615-628, https://doi.org/10.1111/isqu.12206
9. Bethmann, D., & Kvasnicka, M. (2012). Theory of Child Adoption. *Ruhr Economic Paper*, 342. http://dx.doi.org/10.2139/ssrn.2084186
10. Zameetha, A. L. F., & Jazeel., M. I. M. (2023). Muslimkaḷiṭaiyilāṉa kuḻantai tatteṭuppu Ampāṟai māvaṭṭa nērvu nilai paṟṟiya āyvu [A study on the incidence of child adoption among Muslims in Ampara district] Muallim Journal of Social Sciences and Humanities, 7(3), 58-69. doi: https://doi.org/10.33306/mjssh/243
11. Ben-Nun, L. (2016.) Adopted Children. Israel: B.N. Publication House. https://www.researchgate.net/publication/296485621_ADOPTED_CHIL DREN

12. Horwitz, S, M., Hurlburt, M, S., Fiebert, J, D, G., Palinkes, L, A., Reutz, J, R., Zharg, J., Fisher, E., Landsverk, J. (2013). Exploration and Adoption of Evidence- Based Practice by US Child Welfare Agencies. Children and Youth Services Review, 36, 147-152, https://doi.org.10.1016/J.childyouth.2013.10 004
13. Zhang, W. Child Adoption in Contemporary Rural China. (2006). *Journal of Family Issues*, 27(3), https://doi.org/10.177/0192513x0583096
14. Mignot, J.F. (2019) Child Adoption in Western Europe, 1900–2015. *Studies in Economic History*. Springer, 333-366. https://doi.org/10.1007/978-3-319-99480-2_14
15. Wang, Z., Wei, L., Peng, S., Deng, L., Niv, B. (2018). Child Trafficking Networks at Illegal Adoption in China. *Nature Sustainability*, 1(5), 254–260. DOI:10.1038/s41893-018-0065-5
16. Paththirana,S. (2021, March, 15). Ilangkaiyil iyangkiya ‘kulanthaikal pannai’. *BBC News*. https://www.bbc.com/tamil/india-41352951.amp
17. Skidmore, M., Anderson, G., & Eiswerth. M. (2014). The Child Adoption Market Place. *International Review of Law and Economics*, 28(3), 220-225. doi:10.1016/j.irle.2008.06.001. 28(3)
18. Selvakkunapalan, S. (2020). Child Adoption Ordinance. (Video File). YouTube. https://youtu.be/XjRNCxevVGc?si=rUQlH6fjqhvqilhs
19. Eke, C.B., Obu, H.A.,Chinawa, J.M., Adimora, G.N.,& Obi, J.E. (2014). Perception of Child Adoption among Parents/ Care Givers of Children Attending Pediatric Outpatients' Clinics in Enugu, South East, Nigeria. *Nigerian journal of clinical practice*, *17*(2), 188-195. doi: 10.4103/1119-3077.127549
20. Bernal, R., Luojia, H., Chiaki,. Moriguchi., Nagypel, E. (2007). Child Adoption in the United States: Historical Trends and the Determinants of Adopted Demand and Supply 1951- 2000. *National Science Foundation*, doi: 10.1.1.700.
21. Ishizawa, H.,Kubo, K. (2013). Factors Affecting Adoption Decision: Child and Parents Characteristics. *Journal of the Family issue*,35(5). https://dor.org/10.1111/0192513x13514408
22. Barroso, R., Ducharne, M.B., Coelho, V., & Costa, I.S. (2017). Psychological Adjustment in Intercountry and Domestic Adopted Adolescents: A Systematic Review. *Child and Adolescent Social Work Journal*, 34(5). Doi: 10.1007/s10560- 016-0485x.
23. Hamilton, L., Cheng, S., Powell, B. (2007). Adoptive parents, adaptive parents: Evaluating the importance of biological ties for parental investment. *American Sociological Review*, 7(2), 95-116. https://doi.org/10.1177%2F000312240707200105
24. Fioole, J.C.C.M. (2015). Give Me Your Child: Adoption Practices in a Small Moroccan Town. *The Journal of North African Studies, 20*(2), 247- 264. doi: 10.1080/13629387.2014.917587
25. Higgins, M., Warren, S. (2008). Engaging the Commodified Face : The Use of Marketing in the Child Adoption Process. *Business Ethics, The Environment and Responsibility*, 11(2), 179-190, https://doi.org/10.1111/1467-8608.00274

26. Johnson, D.E. (2002). Adoption and the Effect on Children's Development. *Early Development*, *68*(1), 39-54, https://doi.org/10.1016/S0378-3782(02)00017-8
27. Lawnet. (2016). Adoption of Children (Amendment). *Ministry of Justice.* Retrived from https://www.lawnet.gov.lk/adoption-of-children-amendment-3/
28. Naja, W. F., Nafrin, M.B. &. Nibras, K. M. (2018). Islam Pengalukku Valangiyulla Porulathara Urimaigal Thodarbana Nadaimuraigalum, Avatrai Petrukkolvathil Pengal Ethirnokkum Savalgalum [Practice of the Economic Rights Granted to Women by Islam and the Challenges Faced by Women in obtaining them: A study based on Hill Village 01 of Sammanthurai Area]. *Proceedings of 5th International Symposium of Faculty of Islamic Studies and Arabic Language on Sustainable Development through Arabic and Islamic Studies,* South Eastern University of Sri Lanka, Oluvil, Sri Lanka. http://ir.lib.seu.ac.lk/handle/123456789/3430
29. Sivachandran, N. (2018). An Analysis of the Legal Parenthood Through Adoption in Sri Lanka. *Law Man Lanka.* Retrieved from An Analysis of the LegalParenthood Through Adoption in SriLanka.Articles | LawManLanka
30. Marsoof, S. (2016). Adoption of Children in Islam and the Muslim Law of Sri Lanka. Retrived from https://www.academia.edu/34554763/Adoption_of_Children_in_Islam_and_the_Muslim_Law_of_Sri_Lanka_by_Justice_Saleem_Marsoof_Presidents_Counsel_judge_of_the_Supreme_Court_of_Sri_Lanka?source=share
31. Onayemi, Olayinka M. and Aderinto, Adeyinka A. (2019) *Child Adoption Investigation in Nigeria: Challenges and Options.* The Nigerian Journal of Sociology and Anthropology, 15 (2), 87-100. https://eprints.lmu.edu.ng/id/eprint/2756
32. தினகரன். (2011).பிள்ளைகளை மகவேற்பு செய்தல் தொடர்பான இலங்கையின் சட்ட நிலைமை. Retrieved from http://www.thinakaran.lk
33. Chinyere, T, N. Socio Religious Impication of Child Adoption in lgboland South Eastern Nigeria. (2013). *Academic Journal of Interdisciplinary Students*, 2(11). doi:10.5901/ajis.2013.v2n11p168.
34. Oladokun, A., Arulojun, O., Oladokun R.,Morhanson, I, O., Bamghoya, E, A.,Adewole I, F., Ojengbede, O, A. (2009). Acceptability of Child Adoption as Management Option for Infertility in Nigeria: Evidence from focus group discussion. *African journal of reproduction health*, 13(1), 79-91.
35. Laws of Sri Lanka. (2019). Adoption of Children Ordinance. *Blackhall publishing.* Retrived from https://www.srilankalaw.lk/revised-statutes/volume-i/9-adoption- of-children-ordinance.html
36. Fonseca, C. (2003). The Politics of Adoption: Child Rights in the Brazilian Setting. Australian Journal of Social Issues, 21(2), 189-211. https://doi.org/10.1111/1467- 9930